(251)

சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2017–2018 ஆம் நிதியாண்டு தசைச் சிதைவு நோய் மற்றும் பக்கவாதத்தால் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் நிதி ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(டி) எண்.75 நாள்: 09.11. 2017
ஹேவிளம்பி ஐப்பசி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை நாள் 16.03.2017.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ந.க.எண்.1473/உ.உ–பிரிவு/2017, நாள் 04.04.2017, 24.05.2017 மற்றும் 28.07.2017.

---

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 16.03.2017 அன்று 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஏனைய அறிவிப்புகளுள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

"தசைச்சிதைவு மற்றும் பக்கவாதத்தால் கை, கால் பாதிக்கப்பட்ட 1,000 நபர்களுக்கு 6.50 கோடி ரூபாய் செலவில் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் முதன் முறையாக வழங்கப்படும்."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ளவாறு 2017–2018 ஆம் நிதியாண்டு தசைச்சிதைவு நோய் மற்றும் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகளை விலையில்லாமல் வழங்குவதற்காக ஒன்றின் விலை ரூ.65,000/– வீதம் 1000 மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் கொள்முதல் செய்ய ரூ.6,50,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் விலை ஏற்றத்தினை பொறுத்து கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ பெற்று வழங்குமாறும், மேலும் இத்திட்டத்திற்கு தேவைப்படும் ரூ.6,50,00,000/–ஐ தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு–1 விதி 99ன் கீழ் முன்பணமாக பெற்று செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2017–2018 ஆம் நிதியாண்டு, தசைச்சிதைவு நோய் மற்றும் பக்கவாதத்தால் கை, கால் பாதிக்கப்பட்ட 1000 மாற்றுத் திறனாளிகளுக்கு தகுதியின் அடிப்படையில் விலையில்லாமல் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் வாங்கி வழங்க ரூ.6,50,00,000/– (ரூபாய் ஆறு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது. மேலும், மேற்படி மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகளை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கவும், மேலும், மேற்படி விதியின்படி மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் பெறப்பட்ட பின்னரே பணப்பட்டுவாடா செய்யப்பட வேண்டும் எனும் நிபந்தனையின் கீழ் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில

ஆணையருக்கு அதிகாரமளிக்கிறது. எதிர் காலத்தில் இத்திட்டம் செயல்படுத்துகையில் மாநில திட்டக்குழுவின் (State Planning Commission) பரிந்துரையை கருத்தில் கொள்ளுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி –3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – NB தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோர் இயங்குவதற்கான சிறப்பு உபகரணம் – 24 பொருள்களும் – வாங்கலும்"

(த.தொ.கு.2235 – 02 – 101 – NB - 2402)

5. மேற்கண்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் கழிப்பதன் மூலம் சரிகட்டப்பட வேண்டும்:-

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 902 கழிக்கவும் – தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – மாநிலச் செலவினங்கள் – JA கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 கணக்குகளிடையே மாற்றம்"

(த.தொ.கு.2235 – 02 – 902 – JA - 3007)

மேலும் கீழ்கண்ட கணக்கு தலைப்பிலிருந்து எதிர் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"J சேமநிதி (b) வட்டி பெறா சேம நிதி – 8229 – 00 – வளர்ச்சி மற்றும் நல நிதி – 200 ஏனைய வளர்ச்சி மற்றும் நல நிதி – BE – மாநில புதுமை நிதி"

(த.தொ.கு.8229 – 00 – 200 – BE - 0006) (outgo)

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 54956 / நிதி(ச.ந.) / 2017, நாள் 07.11.2017.ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.(பெயரில்)

**நகல்:-**
நிதி (சந/வ.செ. பொது. II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மாதிந)த் துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
இ.கோ/உ.திரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்

14/11/17

1/3